★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

3 தசீய தினசரி National Tamil Daily
மலர் 9 ( 4-1-67 ) இதழ் 525

பராபவ ரும்ழான் 22 மார்கழி 20 புதன்கிழமை

## கண்தான சங்கத்தின் 100-வது அன்பளிப்பு

கொழும்பு, செவ்.

இலங்கை கண்தான சங்கத்தினர் இந்திய ஹைகமிஷனர் திரு. பீம்சென்சச்சாரிடம் ஒரு சோடி கண்களை அன்பளிப்புச் செய்தனர்.

பொரளையைச் சேர்ந்த அறுபது வயதுள்ள ஒருவரிடமிருந்து பெறப்பட்ட இக் கண்கள், இந்தியாவிலுள்ள கண்பார்வை இழந்த ஒருவருக்கு சத்திரசிகிச்சைமூலம் பொருத்தப்பட விருப்பதாக கண்தான சங்கத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய ஹைகமிஷனரிடம் அன்பளிப்பு செய்யப்பட்ட ஒருசோடி கண்களும் விமானம்மூலம் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இலங்கை கண்தான சங்கத்தினர் வழங்கிய நூறாவது அன்பளிப்பு இதுவாகும் என்று சங்கத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதுவரை எட்டு வெளிநாடுகளுக்கு இலங்கையின் கண்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளதென்றும் வேறு சிலநாடுகளிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# தமிழரசுக் கட்சி: கொழும்புக்கிளை கலைக்கப்பட்டது

## தலைவர் மீது தடை நடவடிக்கை: மற்றுமொருவருக்கு கல்தா

கொழும்பு, செவ்வாய்

நாட்டையும் கட்சியையும் எதிர்நோக்கும் பல்வேறு விஷயங்கள் குறித்தும் விரிவான முறையில் ஆராயும் பொருட்டு இன்று கொழும்பில் கூடிய இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயற்குழு, தனது முதல் நடவடிக்கையாக தமிழரசுக்கட்சியின் கொழும்புக்கிளையின் நிர்வாகக் கமிட்டியைக் கலைத்துள்ளது. இதன் எதிரொலியாகக் கட்சியைச்சேர்ந்த சிலர்மீது ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்சியின் கொழும்புக் கிளை கலைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து புதிய அங்கத்தவர்களுக்கான தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கிறது.

தமிழரசுக் கட்சித் தலைவர் நல்லூர் எம். பி. வி. நாகநாதன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உள்ளிட்டு கட்சி எம் பிக்களும் முக்கிய உறுப்பினர்களும் சமுகமளித்திருந்தனர்.

இக்கூட்டம் வம்பலப்பிட்டியில் நடைபெற்றது.

கட்சியின் பொதுக் காரிய சபையின் தீர்மானப்படி கொழும்புக்கிளைமீது நடவடிக்கை எடுக்கும் விஷயம் செயற்குழுக்கூட்டத்தில் முக்கிய இடத்தைப் பெற்றது.

### தேர்தல் நடைபெறும்

கட்சியின் கொழும்புக் கிளை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்புக் கிளையின் நிர்வாகக்கமிட்டிக்கான புதிய தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கிறது. இதற்கான திகதி பின்னர் முடிவுசெய்யப்படுமென்றுசெயற்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### கட்சியிலிருந்து நீக்கம்

"விடுதலை" பத்திரிகையை வெளியிடுபவரான திரு. ஆடியபாதத்தைக் கட்சியிலிருந்து நீக்குவதென்றும் செயற்குழு தீர்மானித்தது.

### இவர் தற்காலி நீக்கம

கொழும்புக் கிளையின் தலைவர் திரு. இளையநந்தசுந்தரம், திரு. அழகப்பன் ஆகிய இருவரையுங்கட்சியிலிருந்து ஆறுமாதகாலத்துக்குத் தற்காலிகமாக தடுத்து வைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு

## மாநகரசபைத் தேர்தலில் மும்முரமாகப் போட்டி

மட்டக்களப்பு நகரசபை, மாநகரசபையின் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டுள்ளதைத்தொடர்ந்து எதிர்வரும் மாநகரசபைத் தேர்தலில் முழுஅளவில் போட்டியிடுவதென்று செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கிறது. மாநகரசபையின் 19 வட்டாரங்களுக்கும் போட்டியிடுவதென்று கட்சி தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கும்பொருட்டு உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் மட்டக்களப்பு முதலாவது எம் பி. திரு. செ. இராசதுரை, செனட்டர் மாணிக்கம், வட்டுக்கோட்டை எம் பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் உள்ளனர்

ஃ

## இலங்கை-இந்திய மசோதா

இன்று காலையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் குறித்தும் ஆராயப்பட்டது. இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு எவரும் கட்டாயமாக நாடு கடத்தப்படுவதை வன்மையாகக் கட்சி எதிர்க்கவேண்டுமென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இதுசம்பந்தமாக ஆராயும்பொருட்டு உபகமிட்டியொன்றும் அமைக்கப்பட்டது. இக்கமிட்டியினர் பிரதமரைச் சந்திப்பார்களெனத் தெரியவருகிறது.

இக்கமிட்டியில் திரு. ஏ. அமிர்தலிங்கம், டாக்டர் ஈ எம். வி. நாகநாதன், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திரு வி. எக்ஸ் மார்ட்டின் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, செனட்டர் மாணிக்கம், திரு வி. என். நவரத்தினம், திரு எலியவெருமாள் (இலங்கைத் தொழிலாளர்கழகம்), செனட்டர் எஸ். நடராஜா ஆகியோர் உள்ளனர்.

செயற்குழு, தமிழ் பல்கலைக்கழகம், மாவட்டசபை மசோதா (விசேஷ) விதிகள் குறித்தும் இன்று ஆராய்ந்தது.

## பயிற்சிபெற்ற ஆசிரியர்க்கு இம்மாத இறுதியில் நியமனம்?

யாழ்ப்பாணம், செவ்

கொழும்புத்துறை, நல்லூர், கோப்பாய் ஆகிய ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலிருந்து பயிற்சிபெற்று வெளியேறிய ஆசிரியர்கள் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் கல்வி அமைச்சின்நிரந்தரக் காரியதரிசியைப் பேட்டி கண்டனர்

தோட்டப் பாடசாலைகளிலிருந்து சொந்தச் செலவில் பயிற்சிபெற்றும்கூட இவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லையெனதிரு. செல்வநாயகம் எடுத்துக் கூறினார்.

இவர்களின் குறையைத் தேரில் கேட்டறிந்த நிரந்தரக் காரியதரிசி, இம்மாத இறுதியில் நியமனம் வழங்கப்படுமென உறுதி கூறினார்.

கார்த்திகைக் காய் மரணம்

## எதிரிகளுக்குதொடர்ந்துறிமாண்ட் விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், செவ்வாய்

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்தவர்களான சரவணமுத்து தியாகராசா, இராமசாமி காசிப்பிள்ளை ஆகிய இருவரும் கடந்த நவம்பர் மாதம் 28ம் திகதி காசிப்பிள்ளையின் பிள்ளைகளான பாக்கியலஷ்மி, வைரவநாதன், ராஜேந்திரன் ஆகிய மூவரையும் கொலை செய்ததாகவும் காசிப்பிள்ளையின் மனைவி விசாலாட்சி, மகள் சரோஜினிதேவி ஆகிய இருவருக்கும் நஞ்சு கொடுத்துகொலை செய்ய முயன்றதாகவும் குற்றம் சாட்டி சங்கானைப் பொலிசாரால்மல்லாகப் நீதிபதி திரு டி. எஸ் நித்சிங்கா முன்னிலையில் தொடரப்பட்டவழக்கு நேற்று தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்பட்டது.

சங்கானைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. ஸி. டி. மெண்டிஸ் நீதிபதியிடம் 2ம் எதிரியின் மனைவியும்முதலாவது சாட்சியுமான விசாலாட்சி சுகவீனம் காரணமாக சாட்சியம் அளிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும், இவ் வழக்கு குற்றப் பத்திரிகை சம்பந்தமாக அட்டர்னி ஜெனரலுடன் கலந்து ஆலோசனை செய்யவிருப்பதால் வழக்கை விசாரணைக்காக வேறொரு திகதிக்கு ஒத்தி வைக்கும்படியும்கேட்டுக் கொண்டார்.

நீதிபதி இன்ஸ்பெக்டரிடம் இந்த வழக்கில் இப்போது சமர்ப்பிக்கப் பட்டுள்ள குற்றப் பத்திரிகையில் 4 5 ம் குற்றச் சாட்டுக்கள் சரியானதாகத் தெரியவில்லை என்றும் அட்டர்னி ஜெனரலுடன் அதுபற்றியும் ஆலோசிக்கும் படியும் கூறி வழக்கை ஒத்தி வைத்தார். எதிரிகளை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவு விடப்பட்டது.

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த ராமசாமி காசிப்பிள்ளையின் பிள்ளைகளான பாக்கியலட்சுமி (5 வயது) ராஜேந்திரம் (8 வயது) வைரவநாதன் (8 வயது) ஆகிய மூன்று குழந்தைகளும் 'கார்த்திகைக்காய்' என்னும் காயை அவித்துச் சமைத்த உணவை உண்டு மரணம் அடைந்தது சம்பந்தமாக பிள்ளைகளின் தந்தை மீதும் ஒரு வைத்தியர் மீதும் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர் ஜே செல்வரெத்தினம் ஆஜரானார்.

## "இந்த அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்?"

### பாவனையாளர்கள் சீற்றம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் மாவுக்கு தட்டுப்பாடு இல்லை என்று உணவுப் பகுதி அதிகாரி தெரிவித்த தகவலை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

அதிகமாக மாவு பெறுவதற்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதென்றும் வியாபாரிகளுடன் பலத்த வாக்கு [illegible] தெரிவித்துள்ளனர்.

மாவு, மல்லி, வினகாய் போன்ற தட்டுப்பாடான பொருட்கள் தற்சமயம் வியாபாரிகளின் கடைகளில் இல்லை எனவும் வேறு வீடுகளுக்கு பதுக்கல் செய்யப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஒரு பாவனையாளர் குறிப்பிட்டார். இதனைப் பரிசோதனை செய்வதற்கு அதிகாரிகள் இருக்கிறார்களா என்றும் அப்படியானால் அவர்கள் ஏன் தற்பொழுது செயலில் ஈடுபடவில்லையென்றும் பலர் புகார் செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

**கோழிகள்:**
அவுஸ் சேலஸ்- கெரும்கேடு, அதக்கும் குஞ்சுகளை பதிவு செய்யாதது) பெற்றுக் கொள்ளலாம். விலை நியாயம். அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 2212

**கோழிக்குஞ்சுகள்:**
இனம் பிரியாத ஒருநாள் குஞ்சுகள் Unsexed) பதிவு செய்யாது பெற்றுக் கொள்ளலாம். விலைசதம் எழுபத்தைந்து (75) அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 2207

## தேவை

**பாமஸிஸ்ட்**
தராதரமுள்ள பாமஸிஸ்ட் (Pharmacist) தேவை. நற்சாட்சிதரக்கூடிய இருவருடைய பெயர்களையும் உங்கள் வேலை நிபந்தனைகளையும் தருக. விளம்பர இலக்கம் 2217, மே/பா "ஈழநாடு". யாழ்ப்பாணம் என எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 2217

## கல்வி

**வகுப்புகள்**
ஆங்கிலம்/தமிழ், தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல், வர்த்தகம் முதலிய வகுப்புகள் முன்முறையாக நடைபெறுகின்றன. வர்த்தக பத்திரப் பரீட்சை வகுப்புகள் விசேஷமானவை. விடுதி வசதி உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2214

**வகுப்புகள்**
விசேஷ ஆங்கில வகுப்புகள் எல்லாப் பிரிவுகளுக்கும் காலை, மாலைகளில் நடாத்தப்படும். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, நெல்லியடி, கரவெட்டி/கலாசாலையார் கோவிலடி, நல்லூர். 2095

**வகுப்புகள்**
கனிஷ்ட கலாசாலையில் புகுவதற்கு உங்களுக்கு வாய்ப்பு உண்டு. ஜி. சி. ஈ. உயர்தரம் - வர்த்தகம் முதலிய வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. எங்கள் அனுபவம் உங்களுக்காகவே காத்திருக்கிறது. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 2097

**வகுப்புகள்**
ஜி. ஏ. கியூ., ஜி. சி. ஈ. உயர்தரம் கலை / வர்த்தகம்; ஜி. சி. ஈ. சாதாரணம்—கலை/விஞ்ஞானம்/வர்த்தகம் வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மாணவியருக்கு விசேஷ வசதிகள் உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2221

---

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
வேறு தினங்களில் 4 காட்சிகள்
WORLD BY NIGHT
No. 3
(Adults Only)

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
கோவிந்தன் — ஜானகி
நடித்த
ஆயிரம் தலைவாங்கி
ஆபூர்வ சிந்தாமணி

**மகாத்மா தியேட்டர்**
நெல்லியடி
போயாதினமும் முதல் நாளும்
காலை 10 மணி மெட்னி
முத்துராமன் — விஜயா
நடித்த
நாணல்
பி. ப. 4-00 மட்டும்
THE SPARTAN-GLADIATORS

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ராமராவ் - அஞ்சலிதேவி
நடித்த
லவகுச
(கலர்)

**வெற்றிகரமான 4-வது வாரம்**

| | |
|---|---|
| லிங்கிலி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) 3-30, மாலை 6-30, 9-30 | விஜேந்திரா (அநுராதபுரம்) |

முத்துராமன் — கே. ஆர். விஜயா
ஜெய்சங்கர், சுந்தரராஜன்,
(இருவேடங்களில்)
எல். விஜயலக்ஷ்மி
நடிக்கும்
பஞ்சவர்ணக்கிளி
இசை: விஸ்வநாதன் - இராமமூர்த்தி
டைரக்ஷன்: கே. சங்கர்

---

## மாஜிஸ்திரேட்டின் கொலை வழக்கு

மானிப்பாய், செவ்.
வெரியவிளான் மாஜிஸ்திரேட் கோர்ட்டின் கொலைவழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான உத்தரவை மல்லாகம் நீதிபதி திரு. டி. எம். நிற்சிங்கம் நேற்று வழங்கினார்.

இந்த வழக்கில் அளவெட்டி வடக்கைச்சேர்ந்த மாஜிஸ்திரேட் கான்ஸ்டபிளான சுப்பிரமணியம் சிவகுருநாதன் என்பவரை அதே இடத்தைச்சேர்ந்த சின்னத்துரை தர்மலிங்கம் கொலை செய்ததாக சம்பவ பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டு இருந்தது. இவ்வழக்கு தொடர்ந்து நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரியின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. அ. அமிர்தலிங்கம் தொகுப்புரை நிகழ்த்தினார். தொகுப்புரையின் பின் நீதிபதி எதிரியை சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு நிற்கும்படி உத்தரவிட்டு சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தினார். எதிரதரப்பில் வழக்கறிஞர் திரு. தி. நவரத்தினத்தின் அனுசரணையுடனும், திரு. கே. வி. எஸ். சண்முகநாதனின் உதவியுடன் திரு. அ. அமிர்தலிங்கம் ஆஜரானார். சம்பவப் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு. சி. வி. மெண்டிஸின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா வழக்கை நடத்தினார்.

ஃ ஃ ஃ

## பலகையை அகற்றினாராம்

சாவகச்சேரி நகரசபை சேர்ந்தவரும் கிராம சேவகருமான சின்னத்தம்பி குருநாதபிள்ளை மானிப்பாய்புரம் சோமசுந்தரம் சேனாதிராசா வுக்குச் சொந்தமானதும் 'இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னணி மானிப்பாய்புரம் கிளை' எனப் பொறிக்கப்பட்ட விளம்பரப்பலகையை இனம் தெரியாது மூவர் அகற்றி சேதப்படுத்துவதற்கு உடந்தையாக இருந்ததாக சாவகச்சேரி நகரப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எம். நிற்சிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி தான் குற்றவாளி என்றார். இதனைத் தொடர்ந்து நீதிபதி வழக்கை விசாரணைக்காக இம்மாதம் 30-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ஃ ஃ ஃ

## நச்சுத்திராவகம் வீசிய வழக்கு

தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்களான சின்னத்தம்பி செல்லையா, செல்லையா ஜெயரத்தினம், செல்லையா நல்லம்மா, செல்லம் அற்னலஜெயம், துரைச்சாமி ஞானமதி ஆகிய ஐவரும் திருமதி சாவகிங்கம் அற்புதத்துக்கு 'நச்சுத்திராவகம் வீசி அவரைக் கொலைசெய்ய முயன்றதாகவும், அதே நேரத்தில் மாதவி பாலசிங்கத்துக்கு நச்சுத்திராவகம் வீசியும், கையாலும் பொல்லாலும் அடித்து காயம் விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சப் இன்ஸ்பெக்டர் இராசநாயகம் சாட்சியமளித்தார். நீதிபதி மேல்விசாரணையை ஜனவரி மாதம் 23-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

**REGAL—JAFFNA**
**NOW SHOWING**
CLINT WALKER
JAY NORTH
in
MAYA

---

## தொற்று நோய் 600 கால்நடைகள் பாதிப்பு

பரந்தன், செவ்வாய்
கரைச்சிப்பகுதியில் சுமார் 600 கால்நடைகள் தொற்று நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தகவலை கரைச்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் தலைமையில் நடைபெற்ற பகுதி மாதாந்தக் கூட்டத்தில் அரசாங்க மிருகவைத்தியர் வெளியிட்டார்.

"கரைச்சிப் பகுதியில் நோய் வேகமாகப் பரவுகிறது. ஆனையிறவு தடுப்பு நிலையத்தில் குடநாட்டுக்கு இங்கிருந்து கால்நடைகளைக் கொண்டுபோவதை தடை செய்திருந்தும் கால்நடைகள் இங்கிருந்து குடாநாட்டிற்கு கொண்டுசெல்லப்படுகின்றன. பொதுமக்களும் கிராம சேவையாளர்களும் குடாநாட்டிலுள்ள கால்நடைகளின் நலனை கருதி குடாநாட்டிற்குள் கால்நடைகள் போகாவண்ணம் பாதுகாக்கும்படி வேண்டுகிறேன்" என்று வேண்டுகோள்விடுத்தார்.

## சாப்பாடு இல்லை

பரந்தன், செவ்.
கரைச்சிப் பகுதியில் உள்ள சாப்பாட்டுக் கடைகள் பல அரிசியின் விலையேற்றத்தினால் சோறு விற்பதை நிறுத்தி விட்டனர்.
சாப்பாட்டுக்காக கடைகளை நம்பியிருந்த உத்தியோகஸ்தர்கள், சிப்பந்திகள், சாரதிமார் மிகவும் கஷ்டமடைகின்றனர்.

## சமயகுரவருக்கு வரவேற்பு

ஊர்காவற்றுறை, செவ்.
புங்குடுதீவு கத்தோலிக்க சமூகத்தைச் சேர்ந்த வணபிதா ஆர். சவிரிமுத்து குருப்பட்டம் பெற்றமையைப் பாராட்டிப் புங்குடுதீவு கத்தோலிக்க மக்கள் வரவேற்பளித்தனர்.
வணபிதா வ. சி. மரியதாசன் தலைமையில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டத்தில் புதிய கத்தோலிக்க சமய குரவரைப் பாராட்டிப் பலர் பேசினர்.

---

வட்டுக்கோட்டை, இல் அராலிமேற்கு ஆஸ்பத்திரிக்கு மின் இணைப்புச்செய்வதற்கு ரூ. 30,000 அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. மின் இணைப்பு வேலை வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

---

# மலிவு விற்பனை

31-1-1967
வரைக்கும்
மூக்குக் கண்ணாடிகள்
பிறேம்கள்
முதலியன
25% சதவீதம் கழிவுடன்
விற்பனையாகிறது.
பல் வேலைகளுக்கும்
அரைச்சலார்
எஸ். எம். பெர்னாண்டோ
13, பிரதான வீதி,
1-ம் குறுக்குத்தெருச் சந்தி,
யாழ்ப்பாணம் 1051

---

# பட்டின சபை வல்வெட்டித்துறை

வல்வெட்டித்துறைப் பட்டின சபைத்தலைவர் அவர்களால் மீன் சந்தைக்கருகாமையில் இரண்டு ஆட்டிறைச்சிக் கடைகளும், இரண்டு கருவாட்டுக் கடைகளும் ஒர் கொல்களமும் கட்டுவதற்கு கேள்விப்பத்திரங்கள் 2-1-67-ம் திகதியிலிருந்து 12-1-67-ம் திகதி காலை 10-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 2-1-67-ம் திகதி தொடக்கம் 11-1-67-ம் திகதி பிற்பகல் 2-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் பெறவிரும்புபவர்கள் அரசாங்க காரியாலயங்களில் இருந்தோ அல்லது உள்ளூராட்சி மன்றங்களிலிருந்தோ ஒப்பந்தக் காரர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களென அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள முன்பு கேள்விப்பத்திரங்கட்கும் வைப்புப்பணத்திற்கும் கீழ்குறிப்பிடும் கட்டணங்கள் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப்பத்திரங்கட்கு கட்டிய தொகை திருப்பிக்கொடுக்கப்பட மாட்டாது.

| | | கேள்விப்பத்திரம் | வைப்புப்பணம் |
|---|---|---|---|
| அ. | 2 ஆட்டிறைச்சிக்கடைகளும் 2 கருவாட்டுக்கடைகளும் | 25-00 | 250-00 |
| ஆ: | கொல்களம் | 10-00 | 150-00 |

கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதியுடன் அனுப்பப்படல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிட்ட உறைகளில் இடது பக்க மேல் மூலையில் 'கடைகள்/கொல்களம் கட்டுவதற்கான வேலைகள்' எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகக்கொண்டுவந்தோ இக்காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்வி விண்ணப்பப் பெட்டிக்குள் போடப்படல்வேண்டும்.

இன்னும் தேவையான விபரங்களை செயலாளரிடமிருந்து அந்நேர நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்)
தலைவர்,
பட்டினசபை
வல்வெட்டித்துறை.

பட்டினசபைக் காரியாலயம்,
வல்வெட்டித்துறை, 31-12-66
2167

---

# தேவை

வட்டுச்சிவன் ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு மனேச்சரும், ஒரு விற்பனையாளரும் தேவை.

மனேச்சர்: சிரேஷ்ட தராதரப்பத்திரமுடையவராகவும், கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராகவும் இருத்தல்வேண்டும்.

பிணை: ரொக்கம் ரூபா 1000/-, ஆதனம் ரூபா 2000/-

சம்பளம்: ரூபா 100/-

விற்பனையாளர்:

பிணை: ரூபா 50/-. சம்பளம்: ரூபா 70/-

தராதரப்பத்திரங்களுடன் 15-1-67-ந் திகதிக்குமுன், காரியதரிசி, வட்டுச்சிவன் ஐக்கிய பண்டகசாலை, வட்டுக்கோட்டை என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 2165

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனத் திருப்தி என்பது ஒரு தெய்வீகக் குணம். உங்களுக்கு மனத் திருப்தி இருப்பின் சிம்மாசனத்திலிருந்தாலும் அல்லது நடைபாதையில் படுத்திருப்பினும் எப்போதும் சந்தோஷமாக இருக்கலாம். வெளி நிலைமை உங்களைப் பாதிக்கவே செய்யாது.

—சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49 JAFFNA
Telegram EELANADU Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு மார்கழி 20ம் (4-1-67)


## பாசன வசதி

“கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்?” என்று ஒரு பழமொழி உண்டு. கண் கெட்டபின்பாவது சூரியனை வணங்கவேண்டுமென்ற புத்தி வருவதே பெரியகாரியம். இந்த வகையில் உணவு உற்பத்தியைப் பெருக்கும்பொருட்டு இலங்கையிலுள்ள தூர்ந்துபோன பழைய குளங்களைச்சீர்திருத்தவும் இப்பொழுதுள்ள குளங்களை ஆழமாக்கவும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருப்பது பாராட்ட வேண்டிய வரவேற்க வேண்டிய விஷயம்.

வடபகுதியில் இரணைமடுக்குளப் பகுதியில் மேலும் ஆறுயிரம் ஏக்கர் நிலத்தை விவசாயச் செய்கைக்குப் பயன்படுத்தவும் இதற்குத் தேவையான நீர் விவசாயிகளுக்குக் கிடைக்கவும் ஒழுங்கு செய்வதென்று அரசாங்க அதிபர் கூட்டிய ஒரு மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. முன்னரே இப்பகுதி விவசாயிகளுக்குப் போதிய நீர் கிடைக்க வழி செய்யப்பட்டிருந்தால் மேலும் பல ஏக்கர் நிலத்தில் பயிர் விளைந்திருப்பது மட்டுமல்லாது நீர் இல்லாத காரணத்தால் மூவாயிரம் ஏக்கர் நிலத்தை விவசாயிகள் கைவிட வேண்டியும் ஏற்பட்டிருக்காது. வடபகுதி வானம் பார்த்தபூமி. விவசாயிகள் உழைப்பாளிகளாயினும் மழையை நம்பியே வாழவேண்டியவர்கள். உணவில் தன்னிறைவு அடையவேண்டிய அவசியத்தை, நாடு சுதந்திரமடைந்த காலத்திலாவது சிந்தித்திருந்தால், அரசியல் மற்றும் அற்ப காரணங்களை மறந்து மகாவலி கங்கை நீர், வாய்க்கால் வழியாகக் கூட இரணைமடுக் குளத்தை அடைந்திருக்கமுடியும். இனியாவது வரண்ட பிரதேசத்தில் பாசன வசதிகளை துரிதமான முறையில் ஏற்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

தூர்ந்துபோன குளங்களையும் ஏரிகளையும் சீர்திருத்தி உணவுச் செய்கைக்கு பாசன வசதியைச் செய்து கொடுக்க இலங்கை வர்த்தக சபை முன்வந்திருக்கிறது. இதையும் அரசியல் கண்கொண்டும், தொகுதி முன்னேற்றத்தைக் கருதியும் பயன்படுத்தாமல் நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு எவ்விதபாகுபாடுமில்லாமல் நாட்டிலுள்ள சகல குளங்களையும் திருத்தியும் ஆழமாக்கியும், புதிய குளங்களை வெட்டியும் பாசனவசதிக்கு வழி வகுக்கவேண்டும். வெளிநாட்டு உதவியையே நம்பியிராமல் பொதுமக்களினதும் வர்த்தக சபையினதும் உதவியுடனும்கூட மகாவலி கங்கை நீரை சிறிது சிறிதாக வடக்கே திருப்ப முயற்சிசெய்யலாம். திட்டமிட்ட ஒரு முனைப்பட்ட முயற்சிதான் இன்று தேவை.

## ஒன்பதாவது ஆண்டுவிழா

இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனது ஒன்பதாவது ஆண்டு நிறைவுவிழாவை கொண்டாடியிருக்கிறது. இந்த ஒன்பது வருடங்களில் அது நிகழ்த்திய சாதனைகளைவிட ஒன்பதுவருடமாக அதன் ‘சோதனை’களை பொதுமக்கள்-பஸ் பிரயாணிகள், வேதனையோடு பொறுத்துவந்ததற்காகச் சபை விழாக் கொண்டாடி இருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

இலங்கையின் எந்தப் பகுதியையும்விட, யாழ்ப்பாணப்பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபை கடந்த ஒன்பதுவருடங்களாக நடத்திவந்த பஸ் போக்குவரத்துச் சேவை பெரிய சோதனைதான். எந்தவொரு இடத்துக்கும் குறிப்பிட்ட நேரத்துக்கு பஸ்சேவை நடைபெற்றிருக்கால் அதைவிட்டு இ. போ. சபை விழாக் கொண்டாடாமல் இருக்க முடியுமா? பஸ்நிலையத்திலிருந்து குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு பஸ் புறப்பட்டு, அது வழியில் தொய்வாய்ப்பட்டு, தங்கிவிடாமல் சரியான நேரத்திற்கு அது போய்ச்சேர வேண்டிய இடத்தைப் போய்ச் சேர்ந்திருந்தால் அதற்காக விழாக் கொண்டாடத்தான் வேண்டும். வருடத்தில் ஒரு மாதம் இ. போ. சபை அனுஷ்டிக்கும் ‘மரியாதை வாரத்தில்’ இ.போ.சபை ஊழியர்கள், குறிப்பாக இப்பகுதி ஊழியர்கள் ஒரு வாரத்திலாவது பிரயாணிகளுடன் ‘மரியாதையாக’ நடந்துகொண்டிருந்தால் விழாக் கொண்டாடவேண்டியதுதான்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒன்பது வருடச் சாதனைகள் பற்றி எவ்வளவோ சொல்லலாம். விழாக் கொண்டாடிய சபைத் தலைவர்கள் வேதனைச் சாதனைகளை அடுக்கடுக்காகச் சொல்வது சரியல்ல. ஆனால் பத்தாவது ஆண்டு விழாவை இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் மாத்திரம் கொண்டாடாமல், பொதுமக்களும் சேர்ந்து கொண்டாடக்கூடிய முறையில் போக்குவரத்துச் சேவை மக்களுக்கான சேவையாக இந்த ஒருவருடகாலத்துக்குள் முன்னேற்றம் பெறவேண்டும். இதை இ. போ. சபை மனத்திற் கொள்ளும் என்று நம்புவோம்.

# நாளை உதயமாகும் வானொலி கூட்டுஸ்தாபனம்

## மக்கள் ரஸனையை நிறைவேற்றுமா?

சில மாதங்களுக்கு முன்பு தனது 40-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய இலங்கை வானொலி நாளைய தினம் (5-1-67) ஒரு புதிய வாழ்க்கைப் பிரவேசம் செய்கிறது.

1923-ம் ஆண்டு கருக்கொண்டு, 1926-ம் ஆண்டு பிறந்து, தபால் தந்திப் பகுதியின் வளர்ப்புக் குழந்தையாகத் தவழ்ந்து தள்ளாடி, 1950-ம் ஆண்டு வரை வந்த வானொலி, மாற்றுத்தாயின் அணைப்பிலிருந்து பிரிந்து தனிப்பட்ட ஒலிபரப்புப் பகுதியாகி, நாளை அந்த நிலையும் மாறி ஒரு கூட்டுத்தாபனமாகிறது.

இதை ஒரு பெரும் முன்னேற்றம் என்று சொல்லலாம். கூட்டுத்தாபனம் இனிமேல் திறைசேரி சட்டதிட்டங்களுக்கு உட்படாமல் ஓரளவு சுதந்திரமாக இயங்கும். ஒலிபரப்பு மந்திரி என்ற முறையில் பிரதமமந்திரியே அதன் விவகாரங்களைப் பற்றி பாராளுமன்றத்துக்கு உத்தரம் கூறுவார். எல்லா விதமான நிகழ்ச்சிகளையும் தயாரித்து ஒலிபரப்புவதில் முன்னிடக்கூடிய அதிகாரமும் சுதந்திரமும் கூட்டுத்தாபனத்துக்கு இருக்கும்.

முன்னெல்லாம் கலைஞர்களுக்கு வழங்கப்படும் சன்மானம் திறைசேரியின் அனு-

வி. என். பி

மதி பெற்றே வழங்கவேண்டும். ஒரு விசேஷ நிகழ்ச்சிக்கு வழக்கத்திலும் பார்க்கக் கூடுதலான சன்மானம் கொடுக்கவேண்டுமென்றாலும், அல்லது வெளியூர் நட்சத்திரக் கலைஞர் ஒருவருக்கு விசேஷமான சன்மானம் கொடுக்க வேண்டுமென்றாலும் திறைசேரியின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்தது. இனிமேல் இவ்வித சிரமங்கள் இருக்கமாட்டாது.

செய்திகளை வெளியிடுவதிலும் முன்பிருந்த இறுக்கமான கட்டுப்பாடுகள் இனிமேல் தளர்த்தப்படும்.

இலங்கை ஒலிபரப்புச் சேவை பெரும்பாலும் லண்டன் பி பி ஸி. நிலையத்தைப் பின்பற்றியே இதுகாலும் வளர்ந்து வந்தது. பி. பி. ஸியைப் போலவே நாளை அதுவும் கூட்டுத்தாபனமாகிறது. உண்மையில், 1950-ம் ஆண்டு பி. பி ஸியிலிருந்து இங்கு வந்த இலங்கை வானொலியின் முதலாவது டைரக்டர் ஜெனரல் திரு. லாம்ப்ஸன், ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் அமைக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருந்தார். இன்றைக்கும் இலங்கை வானொலி கட்டடத்தின் முகப்பில் ஸி. பி. ஸி. (C. B. C) ‘சிலோன் புரோட்காஸ்டிங் கோப்பரேஷன்’ என்று பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். ஆனால் லாம்ப்ஸனின் சிபார்சை அரசாங்கம் அப்பொழுது ஏற்றுக்கொள்ளவில்லை.

பி. பி. ஸி கூட்டுத்தாபனத்தை பின்பற்றில், இலங்கைஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் சகலவிதமான பொதுக்கழகங்களுடன் கலந்தாலோசித்து சில ஆலோசனைக் குழுக்களை நியமிக்க வேண்டும். சங்கீதம், கிராம நிகழ்ச்சி, கல்வி ஒலிபரப்பு, வாய்ப்பேச்சு (இதில் செய்திகள், பேச்சுகள், நாடகம் எல்லாம் அடங்கும்) முதலிய பல தரப்பட்ட நிகழ்ச்சிகளு[illegible]

விசேஷமான கட்டுப்பாடுகளின்றி செய்தி ஒலிபரப்பு விஸ்தரித்து அபிவிருத்தியடைய வேண்டும். இதுகாலும் இலங்கை செய்திகளை அறிவதற்கு நாம் பி. பி. ஸி., ஆகாஷவாணி முதலிய நிலையங்களையே நம்பியிருந்தோம். இங்கு நடந்த பல முக்கியமான சம்பவங்களை வெளிநாடு வானொலிகள் அறிவித்த பின்புதான் நமது இலங்கை வானொலி தயங்கித் தயங்கி சொல்லி வந்தது. இனிமேல் இந்தக் கவலை இருக்கமாட்டாதென்று உறுதியாக நம்பலாம். எல்லா விதமான நிகழ்ச்சிகளின் தரத்தையும் உயர்த்துவதற்கு முழுமூச்சாக முயற்சி எடுக்கவேண்டும். ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் நூற்றுக்குக் கிட்டத்தட்ட அறுபது விகிதம் இசை நிகழ்ச்சிகள் ஆதலினால் அவற்றில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

இது ஒரு சிக்கலான விஷயம். சாஸ்திரிய சங்கீதப் பிரியர்கள், லகு சங்கீதப் பிரியர்கள் ஆகிய இருவகையினரையும் திருப்திப்படுத்தும் பொறுப்பு ஒருபுறமிருக்க, பொதுவாக ஜனங்களின் ரஸிகத்தன்மையை உருவாக்கும் முக்கியமான கடமையும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தங்கியிருக்கிறது. ரஸிகர்களுக்கு தெரியாமலேயே அவர்களுடைய ரஸிகத்தன்மையை உயர்த்தும் கலை வானொலிக்குண்டு. இதை மிகவும் நாஸூக்காகச் செய்வது இசை நிகழ்ச்சிகளின் கெட்டித்தனமான அமைப்பில் தங்கியிருக்கின்றது.

ஆலோசனைக் குழுக்கள் கூறும் ஆலோசனைகள் எல்லாவற்றையும் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நியதி இருக்கமாட்டாது ஆயினும் குழுக்களுக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் அந்தந்தத் துறையில் மறுக்கமுடியாத தகுதிவாய்ந்தவர்களாயும் கண்ணியமானவர்களாயும் ஒலிபரப்புக்கலையில் ஆர்வம் கொண்டவர்களாயும் இருந்தால் அவர்கள் கூறும் ஆலோசனைகளையும் திருத்தங்களையும் கூட்டுத்தாபனம் ஏற்காமல் இருக்கமுடியாது.

கூட்டுத்தாபனத்தின் மூலம் பொதுமக்கள் எதிர்பார்க்கும் உடனடியான அபிவிருத்திகள் இரண்டு. முதலாவது, பிரதேச வானொலி நிலையங்களை யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் நிறுவுதல். இரண்டாவது, வெளிநாடுகளுக்கான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மாத்தறை, கண்டி முதலிய இடங்களில் அஞ்சல் நிலையங்களை அமைப்பது வெறும் கண் துடைப்பாகும். இந்நிலையங்கள் கொழும்பிலிருந்து ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளை இனிப் பின்னோலத் திருப்பவும் அஞ்சல் செய்வதற்கே உதவும். ஒவ்வொரு பிரதேசத்துக்குமுள்ள அதன் தனிப்பட்ட பண்பையும், கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் முறையில் தனித்தியங்கும் ஒலிபரப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதையே பொதுமக்கள் விரும்புகிறார்

(5-ம்பக்கம் பார்க்க)

# நாகரீகம் எது?

35 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒரு கற்பழிப்பு; 5 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒரு களவு; 3 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒரு ரத்தக் களரி, ஒவ்வொரு நிமிடமும் ஒரு மோட்டார் கார் திருட்டு; 28 நிமிடங்களுக்கு ஒரு தடவை வீடு புகுந்து கொள்ளை!

நல்லவேளை நம் நாட்டிலல்ல, ஆண்டவனே! உலகிலேயே செல்வமும், சிறப்பும், நாகரிகமும், நல்வாழ்வும், சகல சௌபாக்கியங்களும் நிறைந்த அமெரிக்கா தேசத்தில்தான் இந்த பயங்கரங்கள் நடக்கின்றன.

பலவருடங்களாக அமெரிக்கா இந்தமகத்தான உலகசாதனையைத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது. உலகிலேயே மிகுதியான பஞ்சமா பாதகங்கள் நடப்பது

### நாட்டிலும் நகரிலும்

அங்குதான். இவற்றால் பொலிசுக்கும் வழக்கறிஞர்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் அமெரிக்க வரியிறுப்பாளர்கள் வருடமொன்றில் 3,700 கோடி டாலர் செலவழிக்கிறார்கள், அதாவது சுமார் 24,300 கோடி ரூபாய்கள்!

இவையெல்லாம் உண்மையில் நாகரீகத்தின் சின்னங்களா? மனிதனின் புத்திகூர்மை அதிகரித்து, அவனுக்குத் தேவையான வசதிகளை நிறையச்சம்பாதித்துக் கொள்ளும் வல்லமை அதிகரித்தாலும் இந்நாட்களில் இவ்விதமான துர்க்கிருத்தியங்கள் நடப்பது அவனுடைய மூளை வளர்ச்சியைக் காட்டுகிறதேயன்றி, ஆத்மீக வளர்ச்சியைக் காட்டவில்லை.

ரஷ்யா முதலிய கொம்யூனிஸ்ட் நாடுகளின் குற்றவிபரங்கள் என்னவென்பது எமக்குச் சரியாகத் தெரியாது. அங்கு என்ன நடக்கிறதென்பதை நாம் அறியோம். ஏனென்றால் அச்செய்திகள் எமக்குச் சரியாக கிடைப்பதில்லை. ஒருவேளை இப்படியான அநாகரீகச் செயல்களுக்கு துப்பாக்கிதான் மறுமொழி கூறுகிறதோ நாம் அறியோம்.

அமெரிக்கா தேசத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் பொலிஸ் சூரப்புலிகள் இல்லை. உண்மையிலேயே, அங்கேதான் உலகத்து நாடுகள் எல்லாவற்றிலும் பார்க்கக் கூடுதலான பொலிஸாரும், துப்பறி நிபுணர்களும், விசேஷ சி. ஐ. டி. புலிகளும் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் அங்கே குற்றங்கள் அதிகரித்து வரும் இரகசியம் என்ன?

நம் நாட்டிலும் பொலிஸ் படை இல்லாவிட்டால் இவ்விதமான குற்றங்கள் அதிகரிக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. பொலிஸ்காரரிடம் அகப்படுவோமே என்ற பயத்தினால் தான் குற்றம் புரிய எண்ணம் வந்தாலும் பலர் அதை அடக்கிக்கொள்கிறார்கள்.

பொலிஸ்காரரும், வழக்கறிஞரும், நீதிமன்றங்களும் இல்லாத ஒரு ராமராஜ்யம் எப்பொழுதாவது, எங்கேயாவது இந்த மண்ணுலகில் உண்டாகுமா?

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றால் மட்டும் போதுமா?'

உடுப்பிட்டி, செவ்

"பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றால் மட்டும் போதாது. அங்கே நல்ல பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் கைக்கொள்ள வேண்டும். கெட்ட சகவாசமுள்ள மாணவர்களுடன் பழகுவதைத் தவிர்க்க வேண்டும். தற்பொழுது பல்கலைக்கழகங்களில் நிகழ்ந்துவரும் சம்பவங்கள் அருவருப்பையும், வேதனையையும் அளிக்கின்றன. மாணவர்கள் கல்வியுடன் ஆசிரியரையும் அன்பாகப் பாலிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று காரணவாய்த் தெற்கு சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும், பொருளாளருமான திரு வி. இராசையா, விஞ்ஞான உயர்கல்வி பெறுவதற்காக பல்கலைக்கழகம் செல்வதை முன்னிட்டு நிலைய அங்கத்தவர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசாரவிழாவிற்குத் தலைமை வகித்த திரு மா. பாலசிங்கம் கூறினார்.

திருவாளர்கள் கந்தசாமி, ஆறுமுகம், கனகரத்தினம், தம்பித்துரை, தங்கராசா உட்பட வேறுபலரும் பேசினர்.

திரு. வி. இராசையா அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசினார்.

யாழ். மாவட்டத்தில்

## இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து இன்றுமுதல் விநியோகம்

யாழ்ப்பாணம், புதன்

இளம்பிள்ளை வாதத்தடுப்பு மருந்து இரண்டாவது தடவையாக இன்று முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் வழங்கப்பட இருக்கின்றது. இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் இராஜசூரியர் மேற்கொண்டுள்ளார். கடந்தமாதம் வழங்கப்பட்ட முதலாவது தடுப்பு மருந்தைப் பெற்றவர்கள் இரண்டாவது தடவை மருந்தையும் நிச்சயம் பாவிக்க வேண்டுமென அவர் அறிவித்துள்ளார். (ந. நி)

## ஆடு திருடியதாக வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

ஆடுதிருடிய குற்றச் சாட்டின் பேரில் பத்துநாட்கள் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த, பாலலிங்கம், தங்கவேலாயுதம் ஆகிய இருவரையும் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் திரு. கி. ஜெ. ராஜரத்தினம் முன்னிலையில் பொலிசார் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபர் சார்பில் புறக்டர் ஜி. வி. பாலசிங்கமும், 2 வது சந்தேகநபர் சார்பில் புறக்டர் ஏ. அன்ரனியும் ஆஜரானார்கள்.

சந்தேகநபர் இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்த மாஜிஸ்திரேட் வழக்கை ஏப்ரல் மாதம் 3-ம் தேதிவரை ஒத்திவைத்தார்.

## அம்பாறை தொழில் நுட்பக் கல்லூரி

[illegible], செவ்வாய்

அம்பாறை ஹாடி தொழில் நுட்பக் கல்லூரி 'ராக்கிங்' காரணமாக மூடப்பட்டு அண்மையில் திறக்கவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது மூடப்பட்டிருந்த காலம் முதலாம் தவணை லீவாகக் கணிக்கப்படுகின்றது. இரண்டாம் தவணை லீவு ஏப்ரல் 1-ந் திகதியிலிருந்து 18-ந் திகதி வரை விடப்படும். 'ராக்கிங்' சம்பந்தப்பட்ட சில மாணவர்கள் இன்னும் திரும்ப அழைக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.


உலக தமிழ் பேசும் மக்களிடையே
தமிழில் ஓர் உலக சாதனை

**லீலா**
**பஞ்சாங்க சித்திரக் கலண்டர்**

லீலா சகல, சமய சமரச, சன்மார்க்க கலண்டர்
அறிவியல் விடயங்கள்

- பஞ்சாங்கம்
- கலை
- கலாச்சாரம்
- சரித்திரம்
- விஞ்ஞானம்
- பௌதிகம்
- இராசாயனம்
- நாகரீகம்
- அரசியல்
- வைத்தியம்
- உலக அதிசயம்
- உலக புதினம்
- சமூகம்
- சமயம்
- ஆத்மிகம்
- உடற்பயிற்சி.

லீலா பசஞ்ாங்க சித்திரக் கலண்டரில் 365 நாட்களிலும் 400 க்கு மேற்பட்ட மேற்படி விடயங்கள் சித்திரங்கள் மூலம் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது

**லீலா பஞ்சாங்க தினக்குறிப்பு**
**நவீன தாரிப்பு**
எங்கும் கிடைக்கும்

யாழ்ப்பணத்தில் தொகையாக கிடைக்குமிடம்:
**செ. ஆ. செ. அன் கோ**
110, ஆஸ்பத்திரிவீதி, :: :: பெரியகடை.

ஏக விநியோகஸ்தர்கள்:
**லீலா ஸ்டோர்ஸ்**
219. தொறிங்ரோட், :: :: கொழும்பு. 11.


## கிரிக்கெட் டெஸ்ட்

கேப்டவுண், ஜன 3.

ஆஸ்திரேலியாவுக்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையே இங்கு நடைபெற்று வரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டின் இரண்டாவது நாளான இன்று தென்னாபிரிக்கா மூன்று விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 56 ஓட்டங்கள் எடுத்தது.

ஆஸ்திரேலியா 542 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

உதைபந்தாட்டம்

## குறூப் சாம்பியன் போட்டி இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன்

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குறூப் சாம்பியன் போட்டிக்காக திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கத்தினர் இன்று மாலை உரும்பராய் விளையாட்டுக்கழகத்துடன் மோதவிருக்கின்றனர். இப்போட்டி பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் நடைபெறும். (ந. நி.)

## போட்டி குழப்பத்தில் முடிந்தது

சுழிபுரம், செவ்வாய்:

பண்டத்தரிப்பு சங்கிலியன் விளையாட்டுக் கழக கோஷ்டிக்கும் சில்லாலை வை. எம். சி. ஏ. தெரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி குழப்பத்தில் முடிவடைந்தது. நேற்று பிற்பகல் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ் உதைபந்தாட்டப் போட்டியை பல்நூற்றுக் கணக்கானவர்கள் பார்வையிட்டனர். கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட சச்சரவைத் தொடர்ந்து பார்வையாளர்களில் சிலர் விளையாட்டு மைதானத்துக்குள் பிரவேசித்து பெரும் குழப்பத்தை செய்தனர். இதனைத் தொடர்ந்து போட்டி நடைபெறவில்லை.

வெடிவிபத்து

## இருதினங்களில் 12பேர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், புதன்

கடந்த இரண்டு தினங்களிலும் யாழ்ப்பாணப் பகுதிகளில் அனேகமான வெடி விபத்துக்கள் நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்காரணமாக 12 பேர் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் சிறு குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த சிவலிங்கம் மகேந்திரன் (17 வயது) என்ற இளைஞர் கொளுத்தி எறியப்பட்ட வெடி ஒன்றின்மேல் காலை வைத்ததினால் காலில் படுகாயங்களுக்குள்ளானார். பண்டத்தரிப்பைச் சேர்ந்த விக்டர் ஜோசப் (45 வயது) என்பவர் கையில் வைத்து வெடியைக் கொளுத்தும் போது வெடித்ததினால் கை, மார்பு, வாய் என்பவற்றில் காயங்களுக்குள்ளானார். வீட்டுக்குள்ளிருந்த வெடிக்கட்டில் தெறி புகுந்ததால் வீட்டுக்குள் படுத்திருந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இராசராணி ஜோசெப் என்ற 4 வயதுக்குழந்தை அபாயமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[illegible] (ந. நி)

# 'அரசியல்வாதிகளை தேசிய வீரர் பட்டியலில் சேர்க்கக்கூடாது'

—உடுப்பிட்டி எம். பி

உடுப்பிட்டி, செவ்.

"அரசியல்வாதிகள் எல்லோரும் தேசிய வீரர்களாகிவிடமாட்டார்கள். அரசியல்வாதிகள் ஒருபோதும் தேசிய ஐக்கியத்தையோ, சமுதாய முன்னேற்றத்தையோ வளர்க்கமாட்டார்கள். ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் வெவ்வேறு முரண்பாடான கருத்துக்களைக் கூறி, பொதுமக்களிடையே குழப்பநிலையை ஏற்படுத்திவிடுவார்கள். அரசியல் தொடர்புடையவர்களின் பெயர்களையும் தேசிய வீரர்கள் பட்டியலில் சேர்ப்பதை நான் கடுமையாக எதிர்க்கிறேன்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், கரவெட்டி, வதிரி திரு இருதயக் கல்லூரியில் நடைபெற்ற தேசிய வீரர்கள் ஞாபகார்த்த தினவிழாவில் பேசுகையில் கூறினார். இவ்விழாவுக்கு வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஏ. வி. சிவநாதன் தலைமை வகித்தார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது நாட்டிலே 9 ஆண்டுகளாகப் பொருளாதார வளர்ச்சி குன்றியமைக்குக் காரணம், தேசிய ஒற்றுமையின்மையேயாகும். நாம் இன்று தேசியவீரர்கள் என நினைவுகூரும் தலைவர்கள் தமமிடையே பல்வேறுபட்ட கருத்துவேறுபாடுகள் காணப்பட்ட பொழுதிலும் நாட்டின் வளர்ச்சிக்கு ஒற்றுமையுடன் பாடுபட்டு உழைத்தார்கள். ஒரு நாட்டிலுள்ள சகல இனமும் ஒற்றுமையை நாடவேண்டும். ஆங்கிலம் கற்றால்தான் அரசாங்க உத்தியோகம் பெறமுடியுமென்ற கருத்து நிலவிய காலத்தில் தமிழைக் கற்றுத் தமிழை வளர்த்த தமிழ்ப் பண்டிதர்களே தேசிய வீரர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பெறுவர். இப்பட்டியலில் விவசாயிகள் இரண்டாவது ஸ்தானத்தைப் பெறுவர். ஆண்டுதோறும் விவசாயத்திலே பெரும் நஷ்டங்கள், கஷ்டசூழ்நிலைகள் ஏற்பட்டபோதிலும் மனந்தளராது பொருளாதாரத் துறையை வளர்க்கப்பாடுபடும் விவசாயிகளை நாம் போற்ற வேண்டும்.

பரம்பரைக் கைத்தொழிலைக் கைவிடாது செய்துவருவோரும் தேசிய வீரர்கள் தான். பொதுவாகக் கூறுவதானால் பொதுமக்கள் தான் தேசியவீரர்களாவர். இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள பெரும் பிரச்சினைகளில் அரிசிக் குறைப்பும் ஒன்றாகிவிட்டது. இத்தருணத்தில் தாய்மார்கள் தியாகம்செய்யத் தயாராக இருக்கவேண்டும். இன்னும் மூன்று மாதகாலத்திற்குள் பதுக்கல்காரர்கள் நாட்டில் அரிசியே இல்லாமற்செய்துவிடுவார்கள். இவர்கள் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும்.

ஆசிரியர் திரு. வ. மகாலிங்கம் பேசுகையில் அரசாங்கம் உண்மையான தமிழ் வீரர்களை மறந்துவிட்டது என்று கூறினார்.

கவிஞர் திரு. வே. சிவக்கொழுந்து, திருவாளர்கள் பண்டிதர் க. வீரகத்தி, வேலன், கணேசன், [illegible] உட்பட வேறுபலரும் பேசினர்.

## தாச்சிப் போட்டி

சங்கானை, செவ்வாய்

சங்கானை ஸ்ரீபாரதி சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் சரஸ்வதி நிலையக் கோஷ்டிக்குமிடையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை 1967ம் ஆண்டுக்கான சிநேக பூர்வமான தாச்சிப் போட்டி ஸ்ரீ பாரதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பாரதி நிலையத்தினர் இரண்டு பழங்களால் (2-0) சரஸ்வதி நிலையத்தினரை வென்றனர்.

## தமிழில் இல்லை

சுழிபுரம், செவ்வாய்

தமிழ்ப் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவுசெய்யப்பட்ட தமிழாசிரியர்கள் சிலர்கள் அல்லது ஆங்கிலப் பத்திரங்களை நிரப்பவேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளார்கள்.

இம்மாதம் 7ந் தேதி ஆரம்பமாகும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை கடந்த வருடப் பிற்பகுதியில் நடைபெற்றது. பரீட்சையை அடுத்து நிரப்பவேண்டிய உறுதிப் பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. பத்திரங்கள் தமிழில் இல்லாததால் ஆசிரியர்கள் கஷ்டப்பட்டனர்.

மல்லி விநியோகம்

## பொலிஸ பாதுகாப்புடன்

கிளிநொச்சி, செவ்

கிளிநொச்சியிலுள்ள விற்பனை இலாகாக் கடையில், கடந்த இரு தினங்களாகப் பொலிஸ் பாதுகாப்புடன் குடும்பம் ஒன்றுக்கு அரை றாத்தல் மல்லி விநியோகிக்கப்பட்டது.

மல்லி வாங்கும்பொருட்டு மக்கள் நீண்டநேரம் கியூவில் காத்திருந்தனர். சிலர் மூன்று மணித்தியாலத்திற்கு மேல் காத்துநின்றனர்.

கிளிநொச்சியில்

## அரிசிவிலை அதிகரிப்பு

கிளிநொச்சி, செவ்

கிளிநொச்சிப் பகுதியில் நாட்டரிசியின் விலை ரூ1-55 சதமாக அதிகரித்துள்ளது. [illegible] 50 சதமாக கூடியுள்ளது [illegible] மேலும் அதிகரிக்கும் என அச்சத்தினால் சிலர் கூடுதலாக வாங்கிச் சென்றனர்.

## பாடசாலைகளில் வேலைப் பயிற்சி அனுபவம்

புன்னாலைக்கட்டுவன், செவ்

ஜனவரி 11-ம் 12-ம் திகதிகள் பாடசாலைகளில் வேலைப் பயிற்சி அனுபவம் அளிப்பதற்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியரும் மாணவரும் இதில் கட்டாயம் பங்குபெற வேண்டுமென வடமாநில கல்வியதிபதி திரு. சி. அருணாசலம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

இவ்விருதினங்களிலும் களைபிடுங்குதல், நாற்று நடுதல், மீன்பிடித்தல், பாடசாலைத் தளபாடங்களை பழுது பார்த்தல், கட்டடங்களை பழுதுபார்த்தல், பாடசாலைச் சுற்றாடலைச் சுத்தப்படுத்தல், முதலுதவிப்பெட்டி ஆக்கல், அரசாங்கப் பண்ணையில் கமத்தொழில், ஆகிய பல வேலை அனுபவங்களை மாணவருக்கு அளிக்கலாமென்றும் அவர் கூறியுள்ளார்.

## பெற்றோர் தினவிழா

உடுப்பிட்டி, செவ்

கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியின் பெற்றோர் தினவிழா இம்மாதம் 18—ம் திகதி நடைபெற இருக்கிறது. இவ்விழாவில் காங்கேசந்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வாரென அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப்பிரவேசம்:

# சட்டம் வந்தாலும் அனுமதிக்கமாட்டேன்

## கண்டனக்கூட்டத்தில் துரைசாமிக் குருக்கள்

மாவிட்டபுரம், திங்கள். "அரசாங்கம் சட்டம் கொண்டுவந்தாலும் நான் ஆலயப்பிரவேசத்தை அனுமதிக்கமாட்டேன்!" என்று மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவில் ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ க. துரைசாமிக் குருக்கள் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவிலில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆலயப்பிரவேசம் மாவிட்டபுரத்தில் நடத்துவதனை ஆட்சேபிக்குமுகமாக நடைபெற்ற கண்டனக்கூட்டத்தில் பிரமஸ்ரீ க. துரைசாமிக் குருக்கள் ஆலயப்பிரவேசம் நடைபெற அனுமதிக்கமாட்டேன் என்ற உறுதிமொழியை வழங்கிப் பேசுகையில் சைவசமயத்துக்கென முன்னோரால் வகுக்கப்பட்ட சட்டம் உண்டு என்றும் அதற்கு மாறாக நடந்து சமயத்துரோகியாக மாறத் தான் தயாராக இல்லை என்றும் அரசாங்க அதிபருக்கு தமது முடிவைத் தெரிவித்துவிட்டதாகவும் சொன்னார். மற்றும் பலரும் பேசினர்.

# பறங்கிமலைத் தொகுதியில் நடிகர் எம். ஜி. ஆர். போட்டி

சென்னை, ஜன. 2

திராவிடமுன்னேற்றக்கழகத்தின் சார்பில் பறங்கிமலைத்தொகுதியில் நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் போட்டியிடுவார்.

சென்னையில் நடைபெற்ற தி. மு. க. மாநில மகாநாட்டின் இறுதியில் தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை தமது கட்சிவேட்பாளர்களையும் போட்டியிடும் தொகுதிகள் பற்றிய விபரங்களையும் வெளியிட்டார். அப்போது நடிகர் எம். ஜி. ஆர். பறங்கிமலையில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டது.

திரு. அண்ணாதுரை இம்முறை காஞ்சிபுரத்தில் போட்டியிடமாட்டார். தென்சென்னையில் லோக்சபா ஆசனத்துக்குப்போட்டியிடுவார்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானகிராமணியார் திருநகரிலும், 'நாம் தமிழர்' தலைவர் எஸ். பி. ஆதித்தனார் ஸ்ரீவைகுந்தம் (திருநெல்வேலி)யிலும், கலைஞர் மு. கருணாநிதி சைதாபேட்டையிலும் போட்டியிடுவார்கள். 138 ராஜ்ய சபை ஆசனங்களுக்கும், 18 பார்லிமெண்ட் ஆசனங்களுக்கும் தி. மு. க போட்டியிடும்.

இன்று தி. மு. க. வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கை வருமாறு:-

ராஜ்ய அரசாங்கங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவைகளின் பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் கட்சி பாடுபடும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜ்ய அரசாங்கங்களின் அதிகாரங்களை மேலும் அதிகரிப்பதற்காக அரசியல் திட்டத்தைத் திருத்தும் முயற்சிகளையும் கட்சி மேற்கொள்ளுமென்றும் தென் ராஜ்யங்களுக்கிடையிலான கலாசார தொடர்புகளை மேலும் நெருக்கமாக வைத்துக்கொள்ளவும் கட்சி வாக்குறுதி அளித்துள்ளது.

இலங்கை வானொலி

## சுபநேரத்தில் கூட்டுத்தாபனமாகும்

கொழும்பு, திங். வருகிற வியாழக்கிழமை (5-ம் தேதி) காலை மணி 7-18 சுபநேரத்தில் இலங்கை வானொலி கூட்டுத்தாபனமாகும். பிரதமர் டட்லி சேனநாயக்கா சம்பிரதாயப்படி அச்சுபநேரத்தில் குத்துவிளக்கேற்றி வைப்பார்.

கூட்டுத்தாபனத்தின் நிர்வாகசபைத்தலைவராக திரு. நெவில்ஜெயவீர இருப்பார்.

இலங்கை வானொலி கூட்டுத்தாபனமாகியதற்குப் பிறகு 'இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பு' என்பதற்குப் பதிலாக 'இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தேசிய சேவை' என குறிப்பிடப்படும்.

## முதல் உதவிப்பெட்டி அவசியம்

புன்னாலைக்கட்டுவன் செவ். இனிமேல் கல்விச் சுற்றுலாவான உல்லாசப் பிரயாணங்களில் மாணவர் செல்லும் போது ஒரு முதல் உதவிப் பெட்டி கொண்டு செல்ல வேண்டியது அவசியமென கல்வி அமைச்சின் நிரந்தர காரியதரிசி திரு. எம். ஜே. பெரேரா சகல பாடசாலை அதிபர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

## நெசவு நிலைய திறப்பு விழா

வட்டுக்கோட்டை, திங்கள். "எனது தொகுதிக்கு அளிக்கப்பட்ட ஏழு நெசவு நிலையங்களில் மூன்று மீனவர் சமூகத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. இச்சமூகத்திலுள்ளவர்கள் ஏழைகளாக இருப்பதால் இப்படியான நடவடிக்கையை மேற்கொண்டேன்" என்று வட்டுக்கோட்டை எம். பி திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று வட்டுக்கோட்டையில் புதிய நெசவு நிலையமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

## முதுகில் கத்திக்குத்து

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம், இராசாவின்தோட்டத்தைச்சேர்ந்த இராசையா (28 வயது) என்ற நபர் முதுகில் கத்தியால் குத்தப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் பொலிஸார் சந்தேக நபரான இவரது சொந்த மைத்துனர் எம். தம்பிராசாவைத் தேடுகின்றனர்.

## 2 கிராமசேவகர்கள் நியமிக்கப்படுவர்

சுழிபுரம், செவ்வாய். வலிகாமம் மேற்கு காரியாதிகாரி பிரிவில் மேலும் இரண்டு கிராம சேவகர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர். தற்போதுள்ள சுழிபுரம் பகுதியிலுள்ள ஓர் பகுதி சுழிபுரம் கிழக்குப் பிரிவாகவும் மற்றது, சங்கானை, பிராம்பத்தை, வடலியடைப்பு ஆகிய சில பகுதிகளை உள்ளடக்கி சங்கானை வடக்கு என்ற பிரிவாகவும் பிரிக்கப்படவிருக்கின்றன. இதன் காரணமாக மேலும் இரண்டுகிராமசேவகர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

## அரிசிப் புத்தகத்தை ஒப்படைத்தனர்

கிளிநொச்சி, செவ். பிரதமர் விடுத்த வேண்டுகோளுக்காக, அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் பொருட்டு, கிளிநொச்சி தொகுதியைச் சேர்ந்த பலர் தங்கள் அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை ஒப்படைக்க முன் வந்துள்ளனர்.

காரியாதிகாரியிடம் 80 பேர்கள் தங்கள் பங்கீட்டரிசிப் புத்தகத்தை ஒப்படைத்தனர்.

மற்றும் 25 விவசாயிகள் தங்கள் அரிசிப் புத்தகத்தை ஒப்படைக்க முன் வந்துள்ளனர்.

## தட்டுப்பாடு

புத்தளம், செவ்வாய். புத்தளம் பெட்ரோல் நிலையங்களில் பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் பதினாறு மைலுக்கு அப்பால் உள்ள முந்தல் பெட்ரோல் நிலையத்துக்குச் சென்று பெட்ரோல் வாங்கவேண்டியுள்ளன. இதன் விளைவாக வாடகைக் கார்க்கூலியும் செலவையும் சாரதிகள் அதிகரித்து விட்டனர். மண்ணெண்ணெய் விளக்குகள் பாவிப்பவர்களும் இதனால் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

## பாராட்டு

ஊர்காவற்றுறை, செவ். புங்குடுதீவு ஆசிரியர் கலாசாலையில் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கடமையாற்றிய அதிபர் திரு. எஸ். இராசரத்தினத்திற்கு புங்குடுதீவு மக்கள் சார்பில் சேவை நலம் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இப்பாராட்டு விழாவிற்கு தீவுப்பகுதி எம். பி. திரு நவரத்தினம் தலைமை வகித்தார். திரு. க. செல்லத்துரை திரு. சதாசிவம் உட்பட பலர் இராசரத்தினத்தின் சேவை நலத்தைப் பாராட்டிப்பேசினர்.

சுழிபுரம், செவ். சுழிபுரம் தபால் கந்தோர் புதிய அதிபராக திரு. எஸ். தம்பிராசா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்பு வல்வை தபால் கந்தோரில் தபால் அதிபராக கடமையாற்றியவர்.

## மந்திரி நடவடிக்கை

வட்டுக்கோட்டை, செவ். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு அத்தொகுதி மக்கள் அளித்த அன்பளிப்பு விழாவில் கலந்து கொண்ட உள்ளூராட்சி மந்திரி திருச்செல்வம் அராலி மக்களின் சார்பில் ஒரு குழுவினர் பேட்டி கண்டு உத்தேச அராலி கிராமசபை உருவாகும் காலம் பற்றிக் கேட்டபோது, தாம் இத்தொகுதி எம். பி. யுடன் [illegible] கூறியுள்ளதாகத் தெரிய வருகிறது.

# "கடைக்குச்சென்ற காதலன் திரும்பி வரவில்லை"

## பொலிசில் இளம் பெண் புகார்

மாவிட்டபுரம். செவ். பதினெட்டு நாட்களுக்கு முன் காணாமல்போன இருபது வயதான இளம் பெண் பேபி சரோஜா, நேற்று திடீரென சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குச்சென்று தனது சோகக் கதையைக் கூறினார்.

அளவெட்டியைச் சேர்ந்த சரோஜா கடந்த மாதம் 15-ம் திகதி இரவு 10 மணிக்கு தாயாருடன் நித்திரை செய்ததாகவும் மறுநாள் காலை 5 மணிக்கு மறைந்துவிட்டதாகவும் சுன்னாகம் பொலிசில் புகார்செய்யப்பட்டிருந்தது. பொலிசார் இவரைத் தேடிவந்தனர்.

சின்னையா ராஜேந்திரம் என்பவருடன் மட்டக்களப்பிற்குசென்றதாகவும் அங்கு கணவன்மனைவியாக இருந்ததாகவும், நேற்று சுன்னாகம் வந்ததாகவும், பேபி சரோஜா பொலிசாரிடம் தெரிவித்தார்.

சுன்னாகம் பஸ்நிலையத்தில் தன்னை நிறுத்திவிட்டு கடைக்குச் சென்ற காதலன் திரும்பிவரவில்லையென்றும் அவர் மேலும் கூறினார். அதன்பின் அங்கு வந்த தாயாருடன் பேபி சரோஜா வீட்டிற்கு சென்றார்.

# கணவனிடம் ஒப்படைக்கப்பட்ட பெண்ணை மீண்டும் காணவில்லை

மாவிட்டபுரம், செவ். பஸ்நிலையத்தில் இரவு வேளையில் இனந்தெரியாத ஆடவர்களுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற 17 வயது இளம் பெண்ணை, சுன்னாகம் பொலிசார் கைது செய்து விசாரித்தபின் கணவனிடம் ஒப்படைத்தார்கள். ஆனால் மீண்டும் அந்த இளம்பெண், சுமார் 60வயதான கணவனைத் தவிக்கவிட்டு மறைந்துவிட்டாராம். இச்சம்பவம் புன்னாலைக்கட்டுவனில் நடந்துள்ளது.

புன்னாலைக்கட்டுவனை சேர்ந்த மயிலு (60 வயது) என்பவரின் 17 வயது மனைவியே வள்ளி. சுன்னாகம் பொலிஸார் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை செய்தனர். காரணம் அவர் இனந்தெரியாத ஆடவர்களுடன் சந்தேகத்திற்கிடமான நிலையில் நடமாடியதுதான்.

பொலிஸார் வள்ளியை கணவனிடம் ஒப்படைத்தனர். ஆனால் வள்ளி மீண்டும் மறைந்துவிட்டது. வள்ளியின் தாயாரும், கணவரும் வள்ளியைத் தேடிவருகிறார்கள்.

## பாராட்டுவிழா

சுழிபுரம், செவ்வாய். சுழிபுரப்பகுதிக்கு புதிய சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்ட திரு பொ. இராசசுந்தரத்துக்கு ஓர் பாராட்டுக்கூட்டம் சுழிபுர மக்களால் அளிக்கப்பட்டது. விழாவுக்கு திரு. என். மகாதேவன் தலைமைவகித்தார்.

திருவாளர்கள்: அ. அமிர்தலிங்கம் எம். பி., எஸ். சங்கரப்பிள்ளை, க. கந்தசுவாமி, அ. ஆறுமுகம், க. சண்முகரத்தினசர்மா, செல்லப்பண்டிதபாக்கியம், கு. செல்லத்துரை உட்படப் பலர் பேசினர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

'ஈழநாடு'

சிறுவிளம்பரக் கட்டண விகிதம்

வரி விளம்பரம் ஒருதரம்

1. வேலை தேவை, வாங்கல், விற்றல் வாடகை, குத்தகை சம்பந்தமான விளம்பரங்கள் - 15 சொற்களுக்குள் 3-50
மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் 15 சதம்
2. வேலை தேவை: 12 சொற்களுக்கு 1-50
மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் 10 சதம்
3. பிறப்பு, இறப்பு, நன்றி கூறல் வாழ்த்துக்கள், நிச்சயார்த்தம், திருமணம் முதலியன 40 சொற்களுக்குள் 8-00
மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் 20 சதம்

சாதாரண விளம்பரம்

4. ஒடர் கைசி அங்குலமொன்றிற்கு 3 00
5. ஏல விற்பனை, பொதுக்கூட்டங்கள், மற்றும் பொதுப்படையான அறிவித்தல்கள் அங்குலமொன்றிற்கு 6-00

ஈழநாடு மே. பா. எனப் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக 2-50

குறிப்பு: (அ) ஒரு முறைக்கு மேல் பிரசுரஞ்செய்தால் 10 வீதம் கழிவு உண்டு.
(ஆ) கடைசிப் பக்கத்தில் பிரசுரிப்பதற்கு 50 வீதம் கூடுதலாகச் செலுத்தவேண்டும்.
(இ) ஆங்கிலத்தில் பிரசுரிக்க 100 வீதம் கூடுதலாகச் செலுத்தவேண்டும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கம்பனிக்காக யாழ்ப்பாணம் [illegible] வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org